

# தி.மு.க. இளைஞர் அணி

## இந்தித் திணிப்பு – நிதிப் பகிர்வில் பாரபட்சம் – தொகுதி மறுசீரமைப்பில் அநீதி

## ஒன்றிய அரசைக் கண்டித்து தொகுதிதோறும் பொதுக்கூட்டம்!

### கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழக இளைஞர் அணியின் மாவட்ட – மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில், புதிய கல்விக்கொள்கை மூலம் இந்தியைத் திணிக்கும், நிதிநிலை அறிக்கையில், தமிழ்நாடு என்ற பெயரை முற்றிலுமாக புறக்கணித்து, நிதிப் பகிர்விலும் பாரபட்சம் காட்டும், தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டை வஞ்சித்து, அநீதி இழைக்கும், ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையில், சட்டமன்றத் தொகுதிதோறும் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் முதன்மைப் பேச்சாளர் ஒருவர், இளம் பேச்சாளர் ஒருவர் என தொகுதிக்கு இரண்டு பேர் பேசவுள்ளனர். மாநில உரிமைகளுக்கு எதிராகச் செயல்படும் ஒன்றிய அரசைக் கண்டித்தும், 72–வது பிறந்தநாள் காணும் மாண்புமிகு கழகத் தலைவர் அவர்களின் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் குறித்தும், எளிய மக்களுக்குப் புரியும் வகையில், விளக்கிப் பேசுவார்கள்.

மக்களுக்கு விழிப்பு உணர்வூட்டும் வகையில், அன்பகத்தில் தயாரிக்கப்பட்டுள்ள துண்டறிக்கையை, தொகுதி மக்களுக்கு வீடு வீடாகச் சென்று விநியோகித்து, அவர்களை இக்கூட்டத்தில் பங்கேற்க செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தமிழ் மக்களின் உரிமைக்குக் குரல் எழுப்பிடும் வகையிலும், உரிமையைத் தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டிக்கும் வகையிலும், இந்தப் பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் நடத்துமாறு, இளைஞர் அணி நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| வ. எண் | நாள் | கழக மாவட்டம் | சட்டமன்றத் தொகுதி | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | 24.03.2025 | தஞ்சாவூர் வடக்கு | பாபநாசம் | அண்ணா சிலை அருகில், பசுபதிக்கோயில் | வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, பூர்ணிமா |
| 2 | 25.03.2025 | தஞ்சாவூர் தெற்கு | பட்டுக்கோட்டை | மதுக்கூர் பேருந்து நிலையம், பட்டுக்கோட்டை | துரை சம்பத், பார்வின் |
| 3 | 25.03.2025 | சென்னை கிழக்கு | துறைமுகம் | ரமணன் தெரு, யானைக்கவுனி | மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., மு.மு.முஸ்தாக் |
| 4 | 25.03.2025 | சென்னை கிழக்கு | வில்லிவாக்கம் | ஜாயின்ட் ஆபிஸ் அருகில், அயனாவரம் | எழுத்தாளர் வே.மதிமாறன், நரேன் கௌதம் |

அன்பகம், சென்னை – 18.
நாள் : 22–03–2025.

கலைஞர் 100 1924 - 2023

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர், தி.மு.க. இளைஞர் அணி



சென்னை அண்ணா சாலையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகளை, நேற்று (23.03.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, அரசுச் செயலாளர் முனைவர் இரா.செல்வராஜ், தலைமைப் பொறியாளர் சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு (தொழில்நுட்பம்) அதிகாரி இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் எம்.செல்வகுமார், கோட்டப்பொறியாளர் சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

### அண்ணாசாலையில் தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை நடைபெற்று வரும்

# உயர்மட்டப் பாலப் பணிகளை திட்டமிட்ட இலக்கின்படி முடித்திடுவீர்!

## அமைச்சர் எ.வ.வேலு நேரில் ஆய்வு செய்து அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

சென்னை, மார்ச்.24-

சென்னை அண்ணாசாலையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்கும் பணிகளை, பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு அவர்கள் களஆய்வு செய்தார்.

சுமார் 400 ஆண்டுகள் பழமை வாய்ந்த அண்ணா சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலுக்கு தீர்வுகாணும் பொருட்டு, சென்னையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை, உயர்மட்ட நான்கு வழித்தட சாலை அமைக்கும் பணிகளை நேற்று (23.03.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு கள ஆய்வு மேற்கொண்டார்.

தேனாம்பேட்டையிலிருந்து - சைதாப்பேட்டை வரை உள்ள முக்கிய சாலை சந்திப்புகளான எல்டாம்ஸ் சாலை சந்திப்பு, எஸ்.ஐ.இ.டி. கல்லூரி சாலை சந்திப்பு, செனடாப் சாலை சந்திப்பு உட்பட ஏழு முக்கிய சாலை சந்திப்புகளை கடக்கும் வகையில் 3.20 கிலோ மீட்டர் நீளத்திற்கு நான்கு வழித்தட உயர்மட்ட சாலை அமைக்கம் பணி திட்டமிடப்பட்டு, ரூ.621 கோடி மதிப்பீட்டில், பணிகள் நடைபெற்று வருகின்றது.

இந்த உயர்மட்ட சாலை மேம்பாலப் பணிகள் மூன்று கட்டங்களாக பிரிக்கப்பட்டுள்ளது.

மெட்ரோ இரயில் சுரங்கப் பாதை இல்லாத இடத்தில், 655 மீட்டர் நீளத்திற்கு, 22 தூண்கள் அமைக்கப்படவுள்ளது. இவ்விடத்தின் நிலத்தூண் அடித்தளம் (Pile Foundation) பணிகள் நடைபெற்று வருகின்றன.

மெட்ரோ இரயில் சுரங்கப் பாதை உள்ள இடத்தில் 1955 மீட்டர் நீளத்திற்கு, 69 தூண்கள் அமைக்கப்படவுள்ளது. பாலத்தின் அழுத்த திறன், சுரங்கப்பாதை மேல்அடுக்கில் எந்த வித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் “மைக்ரோ பைல்“ என்ற புதிய தொழில்நுட்ப முறையில் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டு, தற்போது “ஜீயோசிந்தெட்டிக்“ என்ற முறையில் மண்ணின் தாங்குத் திறன் அதிகரிக்கும் வகையில், “ஜீயோ செல், ஜீயோ டெக்ட்டில்ஸ் மற்றும் ஜீயோ கிரிட்“ போன்ற ஏழு அடுக்குகளாக அமைக்கப்படவுள்ளது. மண்ணின் தாங்குத் திறனை சோதனை செய்ய 26.03.2025 அன்று திட்டமிடப்பட்டுள்ளது.

460 மீட்டர் நீளத்திற்கு தேனாம்பேட்டை மற்றும் நந்தனம் மெட்ரோ நிலையங்களில், 41 போர்டல் ப்ரேம் (Portal Frame) அமைக்கப்பட்டு, உயர்மட்டப் பாலம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த மூன்று கட்டப் பணிகளும், தனித்தனியாக பணிகள் மேற்கொள்ள அதிகாரிகளுடன் கலந்து ஆலோசித்து, திட்டமிட்ட இலக்கின்படி பணிகளை முடிக்க அதிகாரிகளுக்கும், ஒப்பந்தகாரருக்கும் அமைச்சர் அறிவுரை வழங்கினார்.

**வடபழனியில் உள்வட்டச் சாலைப் பணிகள் ஆய்வு!**

மேலும், வடபழனியில் உள் வட்டச் சாலையில் கி.மீ. 5/450 6/0 (LS) CRIDP 202425 திட்டத்தின்கீழ் ரூ.360 லட்சம் மதிப்பீட்டில் 550 மீட்டர் நீளத்திற்கு மழைநீர் வடிகால் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது. தற்போது 110 மீட்டருக்கு வடிகால் பணிகள் நிறைவடைந்துள்ளன. வடிகால் அமைக்கும் இடத்தில் மின்தடங்கள் மின் மாற்றிகள். மெட்ரோ குடிநீர் குழாய்கள், தெரு விளக்குகள், உள்ளிட்ட சேவை அமைப்புகளை மாற்றியமைத்து பணிகளை மேற்கொள்வதால், இப்பணிகளை வரும் ஜீன்(June) மாதத்திற்குள் விரைந்து முடிக்கப்பட வேண்டுமென அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசுச் செயலாளர் முனைவர் இரா. செல்வராஜ், தலைமைப் பொறியாளர் சத்தியபிரகாஷ், நெடுஞ்சாலைத்துறை சிறப்பு (தொழில்நுட்பம்) அதிகாரி இரா.சந்திரசேகர், கண்காணிப்புப் பொறியாளர் எம்.செல்வகுமார், கோட்டப்பொறியாளர் சந்திரசேகர் மற்றும் துறைச் சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

### போஸ்ட் மெட்ரிக் – ப்ரீமெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற

# குடும்ப ஆண்டு வருமான வரம்பை ரூ 8 லட்சமாக உயர்த்திடுக!

## மாநிலங்களவையில் – பி.வில்சன் வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச்.24-

போஸ்ட் - மெட்ரிக் மற்றும் ப்ரீ - மெட்ரிக் கல்வி உதவித் தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.2.5 இலட்சத்தில் இருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்தக் கோரி மாநிலங்களவையில் பி.வில்சன் வலியுறுத்தினார்.

இதுகுறித்து அவர் பேசியதாவது :

எஸ்.சி., எஸ்.டி., மற்றும் ஓபிசி வகுப்பைச் சார்ந்தவர்கள், போஸ்ட்- மெட்ரிக் மற்றும் ப்ரீ- மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பானது நெடுநாட்களாக ரூ.2.5 இலட்சம் என்ற அளவிலேயே இருந்து வருகிறது.

இந்த இரண்டு இலட்சம் என்கிற வருமான வரம்பானது, இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நுகர்வோர் விலைக் குறியீட்டுடன் இணைந்த திருத்தங்



களை செய்யலாம் என்ற விதிமுறையின் கீழ் 2010 ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட வழிகாட்டுதல்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டது.

அந்த வகையில் திருத்தமானது கடைசியாக கடந்த 2013 ம் ஆண்டு மேற்கொள்ளப்பட்டது. அதன் பின்னர், கல்விச் செலவுகள் மற்றும் பணவீக்கம் அதிகரித்த போதிலும், வருமான உச்சவரம்பு மற்றும் உதவித்தொகைகள் மாற்றம் காணாமல் உள்ளன.

மாறாக, இந்திய அரசாங்கமானது சமீபத்தில் பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கான (EWS) வருமான வரம்பினை ரூ.8 இலட்சமாக உயர்த்தியுள்ளது.

இதேபோன்று எஸ்.சி., எஸ்.டி மாணவர்களுக்கான தேசிய வெளிநாட்டு கல்வி உதவித்தொகை மற்றும் உயர்தர கல்வித்திட்டம் போன்ற திட்டங்களுக்கான வரம்பு ரூ.8 இலட்சமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆனால், போஸ்ட்-மெட்ரிக் மற்றும் ப்ரீ-மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களுக்கு இந்த வரம்பு உயர்த்தப்படவில்லை. இதனால் பின்தங்கிய நிலையிலிருக்கும் ஏராளமான தகுதி படைத்த மாணவர்கள் இந்த உதவித்தொகையை பெறமுடியவில்லை.

உயர்கல்வி குறித்த அகில இந்திய கணக்கெடுப்பின் அறிக்கையின்படி, எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதமானது, மற்றவர்களை விட மிகவும் பின்தங்கியுள்ளது.

இந்த இடைவெளியைக் குறைப்பதிலும், உயர்கல்விக்கான சமமான அணுகலை உறுதி செய்வதிலும் நாம் தீவிரமாக இருக்கிறோம் என்றால், கல்வி உதவித்தொகைக்கான வருமான உச்சவரம்பு உயர்த்தப்பட வேண்டும்.

எனவே, போஸ்ட் - மெட்ரிக் மற்றும் ப்ரீ - மெட்ரிக் கல்வி உதவித்தொகையை பெறுவதற்கான குடும்ப ஆண்டு வருமான வரம்பினை ரூ.2.5 இலட்சத்தில் இருந்து ரூ.8 இலட்சமாக உயர்த்த ஒன்றிய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்!

இவ்வாறு பி.வில்சன் அவர்கள் பேசினார்.



காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், குன்றத்தூர் நகர தி.மு.க. சார்பில் முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு, 40 அணிகள் கலந்துகொண்டு இரண்டு நாட்கள் நடைபெற்ற மாபெரும் கைப்பந்து போட்டியில் வெற்றி பெற்ற அணிகளுக்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பரிசினை வழங்கினார். அருகில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் நகர மன்ற தலைவர் கோ.சத்தியமூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.